**22 யானை எய்த படலம்**

விக்ரம பாண்டியன் சோமசுந்தரரின் அருள் நிரப்பப் பெற்றிருந்தமையால், பகைக் கொண்ட சோழனால் நேர் வழியில் அவனைக் கொல்ல முடியவில்லை.அவனை சூழ்ச்சியால் கொல்ல திட்டமிட்டான் சோழன்.

அஞ்ஞானம், கிரவுஞ்சம், கோவரத்தனம், திரிகூடம், அத்திவெற்பு, சைலம், ஏமகூடம், விந்தம் என்னும் எட்டு மலைகளிலுள்ள சமணர்களிடம் விக்ரமனை கொன்றால், தனது ராஜியத்தில்பாதியை அவர்களுக்கு அளிப்பதாக கூறினான்.

சமணர்களும் அதற்கு உடன்பட்டு, அபிசார யாகம் செய்தனர். ஓம குண்டத்தில் எட்டி முதலான, தீய விறகுகளையும், வேமயண்ணையையு ம், நச்சுப் பிராணிகளின் ஊனையும், மிளகு பொடிகலந்த எண்ணையை யும் தீயில் வார்த்தனர். யாகத்தீயால் அருகாமையில உள்ள நந்தவனங்க ள், சோலைகள், காடுகள் கருகி அழிந்தன.

ஓமகுண்டத்திலிருந்து மத யானை ஒன்று வெளி வந்தது. அந்த யானை யிடம் சமணர்கள் மதுரையோடு விக்ரம பாண்டியனையும் அழித்து வருமாரு பணித்தார்கள். இமயமும்அஞ்சுமாறுவடவைத்தீநடந்துவருவ தைப்போலயானை பிளறிக் கொண்டு வந்தது.

பயந்த விக்ரம பாண்டியன் ஐயனை வணங்கி நிற்க, சமணர்களை எதிர்க்க தாமே வில்லேந்தி வந்து, யானையைக் கொல்வதாகக் உறுதி கூறினார். பின் நகரின் கீழ்திசையில் ஓர் அட்டாலை மண்டபம் அமைக்குமாறு திருவாக் கருளினார். விக்ரம பாண்டியனும் அதன் படி பதினாறு தூண்கள் கொண்ட அட்டாலை மண்டபம் அமைத்தான். காளைப் பருவமுடைய வேடுவச் சிறுவனாகத் தோன்றி யானையின் வரவிற்காக அந்த மண்டபத்தில் காத்திருந்தார் ஈசன்.

யானை சமீபித்ததும் சிங்கம் போல் கர்ஜித்துக் கொண்டு நரசிங்கக்னைப் பூட்டி, நாணை இழுத்து விட்டார். அக்கனையானது யானையின் மதகத்தைக் கிழித்து யானை கொன்றது.

யானை இறந்ததைக் கண்ட சமணர்கள் பதைத்தனர். இறந்த யானை யைக் கண்டு மகிழ்ந்தான்விக்ரமன். யானையின் உடலிலிருந்து பீறிட்டு வந்த ரத்தத்தைக் குடிக்க வந்த சமணர்களைபாண்டியன் விரட்டியடித்தான்.

அட்டாலை மண்டபத்தில் தங்கி, யானையைக் கொன்ற ஐயனை அங் கேயே வீற்றிருந்துஅருளுமாறு வேண்டினான் மன்னன். ஐயன் எறிந்த சிங்கக்கனையானது உக்கிர நரசிங்கராகஅங்கே எழுந்தருளியது.

பிரகலாதன் அங்கு தவம் செய்து, அழியா வரம் பெற்றதாக புராணங்கள் கூறுகின்றன.

**பல்லவி**

சமணர்களைக் கொண்டு அபிசாரயாகம் செய்து
மதுரையோடு அரசனையும் அழிக்கச் சொன்னான் சோழன்

**அனுபல்லவி**

நமனை யொத்த யானை ஓமகுண்டத் தினின்றும்
சமர் புரிந்திடவே சடுதியில் வந்தது

**சரணம்**

சிங்கத்வனியுடன் நரசிம்மக் கணைத் தொடுத்து
சீறின யானையை சிதைந்திடச் செய்தாய்
பொங்கும் குருதியையும் குடிக்காமல் சமணர்களை
விரட்டி வேந்தன் வேண்டிட அங்கு வீற்றிருந்தாய்